பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

**04.06.2024** **7.15 PM** **TUESDAY**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மக்களவைத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்காத நிலையில், பிஜேபி அதிக இடங்களில் முன்னிலை வகிக்கும் தனிப்பெரும் கட்சியாக உள்ளது.

- ஒடிஷா சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி-யும், ஆந்திரப்பிரதேசத்தில் தெலுங்கு தேசம் கட்சியும் முன்னிலை பெற்றுள்ளன.

- தமிழகத்தில் 39 தொகுதிகளிலும், புதுச்சேரியிலும் திமுக கூட்டணி முன்னிலையில் உள்ளன. தருமபுரி மக்களவைத் தொகுதியிலும், விளவங்கோடு சட்டப்பேரவை இடைத்தேர்தலிலும் காங்கிரஸ் வெற்றிபெற்றுள்ளது.

- மக்களவைத் தேர்தல் முடிவுகள் வெளியாகிவரும் நிலையில், இந்திய பங்குச்சந்தைகள் கடந்த நான்காண்டுகளில் இல்லாத அளவுக்கு பெரும் சரிவை சந்தித்துள்ளன.

- இந்தோனேஷியா ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் திரிஷா ஷோலி – காயத்ரி கோபிசந்த் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

*----இனி விரிவான செய்திகள்---*

**<<<<<>>>>**

மக்களவைத் தேர்தலில், எந்தக் கட்சிக்கும் அறுதி பெரும்பான்மை கிடைக்கவில்லை.

543 தொகுதிகளுக்கான வெற்றி மற்றும் முன்னணி நிலவரங்கள் தெரியவந்துள்ளன.

பிஜேபி அதிக இடங்களில் முன்னிலை பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அறுதிப்பெரும்பான்மையான 272 தொகுதிகளைவிட கூடுதல் இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

இந்த கூட்டணி 294 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

இதில் இதுவரை பிஜேபி 58 தொகுதிகளில் வெற்றி பெற்று, 183 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளது.

மதசார்பற்ற ஜனதா தள் 2 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது.

ஐக்கிய ஜனதாதளம் 12 தொகுதிகளிலும், சிவசேனா 5 தொகுதிகளிலும் முன்னிலை பெற்றுள்ளது. ஒரு தொகுதியில் வெற்றிபெற்றுள்ள தெலுங்கு தேசம் 15 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

குஜராத் மாநிலம், சூரத் தொகுதியில் பிஜேபி வேட்பாளர் திரு. முகேஷ் குமார் சந்திரகாந்த் தலால் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கர்நாடக மாநிலம் சித்ரதுர்கா தொகுதியில் பிஜேபி வேட்பாளர் திரு. **Govind Makthappa Karjol** தமக்கு அடுத்த படியாக வந்த காங்கிரஸ் வேட்பாளர் திரு. சந்திரப்பா-வை விட 48 ஆயிரத்து 121 வாக்குகள் கூடுதலாக பெற்று வெற்றி பெற்றார்.

ராஜஸ்தான் மாநிலம், ஜெய்ப்பூரில் பிஜேபி வேட்பாளர் திருமதி. மஞ்சு சர்மா, காங்கிரஸ் வேட்பாளரை விட 3 லட்சத்து 31 ஆயிரத்து 767 வாக்குகள் கூடுதலாக பெற்று, வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி 232 தொகுதிகளில் முன்னிணியில் உள்ளது.

இதில் 7 தொகுதியில் வெற்றிபெற்றுள்ள காங்கிரஸ் 91 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளது.

ஆம் ஆத்மி ஒரு தொகுதியில் வெற்றிபெற்று இரண்டு தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

சமாஜ்வாதி கட்சி 35 தொகுதிகளிலும் திரிணமூல் காங்கிரஸ் 29 தொகுதிகளிலும் ராஷ்ட்ரீய ஜனதா தள் 4 தொகுதிகளிலும் திமுக 22 தொகுதிகளிலும் முன்னிலை வகிக்கின்றன.

பிரதமர் திரு. நரேந்திரமோடி, தாம் போட்டியிட்ட வாரணாசி தொகுதியில் 1 லட்சத்து 52 ஆயிரத்து 513 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா ராஜஸ்தான் மாநிலம், கோட்டா தொகுதியில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர், ஹிமாச்சலப்பிரதேசத்தின் ஹமீர்பூர் தொகுதியில் 1 லட்சத்து 82 ஆயிரத்து 357 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா, குஜராத் மாநிலம் காந்திநகர் தொகுதியில் 7 லட்சத்து 44 ஆயிரத்து 716 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளார்.

நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி, கர்நாடக மாநிலம், தார்வாட் தொகுதியில் 97 ஆயிரத்து 324 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி வயநாடு தொகுதியில் 3 லட்சத்து 64 ஆயிரத்து 422 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளார்.

ரெய்பரேலி தொகுதியில் அவர் 3 லட்சத்து 89 ஆயிரத்து 341 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்.

மத்திய அமைச்சர்கள் திரு நிதின்கட்கரி, திரு. பியூஷ் கோயல் ஆகியோர் தாங்கள் போட்டியிட்ட தொகுதிகளில முன்னிலை வகிக்கின்றனர்.

<<<<<>>>>>

மத்தியப்பிரதேசத்தில் உள்ள 29 தொகுதிகளிலும், தில்லியில் உள்ள ஏழு தொகுதிகளிலும், உத்ராகண்டில் உள்ள ஐந்து தொகுதிகளிலும், ஹிமாச்சலப்பிரதேசத்தில் இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ள பிஜேபி இதர இரண்டு தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

அருணாச்சலப்பிரதேசத்தில் 2 தொகுதிகளிலும் பிஜேபி முன்னிலை வகிக்கிறது.

குஜராத்தில் உள்ள 26 தொகுதிகளில் 7ல் வெற்றிபெற்றுள்ள பிஜேபி, 18 தொகுதிகளிலும், காங்கிரஸ் ஒரு தொகுதியிலும் முன்னிலை வகிக்கின்றன.

சத்தீஷ்கரில் உள்ள 11 தொகுதிகளில் பிஜேபி 10 தொகுதியிலும், காங்கிரஸ் ஒரு தொகுதியிலும் முன்னிலை பெற்றுள்ளது.

ஜார்க்கண்டில் உள்ள 14 தொகுதிகளில் பிஜேபி 8 தொகுதிகளில், ஜேஎம்எம் 3 தொகுதிகளிலும், காங்கிரஸ் இரண்டு தொகுதிகளிலும் முன்னிலை பெற்றுள்ளன.

கேரளாவில் உள்ள 20 தொகுதிகளில் இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ள காங்கிரஸ் 12 தொகுதிகளிலும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 2 தொகுதிகளிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், கேரள காங்கிரஸ் மற்றும் ஆர்எஸ்பி தலா ஒரு தொகுதியிலும் முன்னிலை பெற்றுள்ளன.

பிஜேபி ஒரு தொகுதியில் வெற்றி பெற்றுள்ளது.

கர்நாடகாவில் உள்ள 28 தொகுதிகளில் 12 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ள பிஜேபி 5 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

3 தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ள காங்கிரஸ் 6 தொகுதிகளிலும், மதச்சார்பற்ற ஜனதா தள் இரண்டு தொகுதிகளிலும் முன்னிலை வகிக்கிறது.

தெலங்கானாவில் 17 தொகுதிகளில் பிஜேபி மற்றும் காங்கிரஸ் தலா ஒரு தொகுதியில் வெற்றிபெற்று, தலா 7 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளது.

**A I M I M** ஒரு தொகுதியில் முன்னிலை வகிக்கிறது.

மணிப்பூரில் உள்ள இரண்டு தொகுதிகளிலும் காங்கிரஸ் முன்னிலை பெற்றுள்ளது.

மகாராஷ்ட்ராவில் உள்ள 48 தொகுதிகளில் ஒரு தொகுதியில் பெற்றுள்ள காங்கிரஸ் 11 தொகுதிகளிலும், பிஜேபி 11 தொகுதிகளிலும் முன்னிலை பெற்றுள்ளது.

ஒரு தொகுதியில் வெற்றி பெற்றுள்ள உத்தவ்தாக்கரே சிவசேனா பிரிவு 9 தொகுதிகளிலும், சிவசேனா 6 தொகுதிகளிலும், தேசியவாத காங்கிரஸ் பவார் பிரிவு 7 தொகுதிகளிலும் முன்னிலை வகிக்கின்றன.

தேசியவாத காங்கிரஸ் ஒரு தொகுதியில் வெற்றிபெற்றுள்ளது.

ஹரியானாவில் உள்ள 10 தொகுதிகளில் ஒரு தொகுதியில் வெற்றி பெற்றுள்ள காங்கிரஸ் நான்கு தொகுதிகளிலும், பிஜேபி 5 தொகுதிகளிலும் முன்னிலை பெற்றுள்ளன.

பஞ்சாபில் உள்ள 13 தொகுதிகளில் நான்கு தொகுதியில் வெற்றி பெற்றுள்ள காங்கிரஸ் 3 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளது.

ஒரு தொகுதியில் வெற்றி பெற்றுள்ள ஆம் ஆத்மி 2 தொகுதிகளிலும், சிரோன்மணி அகாலிதள் 1 தொகுதியிலும் முன்னிலை பெற்றுள்ளது.

உத்தரபிரதேசத்தில் உள்ள 80 தொகுதிகளில் 3 தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ள பிஜேபி 30 தொகுதிகளிலும், ஒரு தொகுதியில் வெற்றிபெற்றுள்ள சமாஜ்வாதி 36 தொகுதிகளிலும்,, ஒரு தொகுதியில் வெற்றிபெற்றுள்ள காங்கிரஸ் 5 தொகுதிகளிலும், ராஷ்ட்ரிய லோக்தள் 2 தொகுதிகளிலும், அப்னா தள் தலா ஒரு தொகுதியிலும் முன்னிலை பெற்றுள்ளன.

ஆஸாத் சமாஜ் கட்சி ஒரு தொகுதியில் வெற்றிபெற்றுள்ளது.

மேற்குவங்கத்தில் உள்ள 42 தொகுதிகளில் திரிணாமுல் காங்கிரஸ் 29 தொகுதிகளிலும், பிஜேபி 12 தொகுதிகளிலும், காங்கிரஸ் ஒரு தொகுதியிலும் முன்னிலை வகிக்கிறன.

ஒடிசாவில் உள்ள 21 தொகுதிகளில் பிஜேபி 19 தொகுதிகளிலும், பிஜு ஜனதா தள் மற்றும் காங்கிரஸ் ஒரு தொகுதியிலும் முன்னிலை பெற்றுள்ளன.

கோவாவில் இரண்டு தொகுதிகளில் பிஜேபி மற்றும் காங்கிரஸ் தலா ஒரு தொகுதியில் முன்னிலை பெற்றுள்ளன.

ஜம்மு காஷ்மீரில் உள்ள ஐந்து தொகுதிகளில் தேசிய மாநாட்டு கட்சி மற்றும் பிஜேபி தலா இரண்டு தொகுதிகளிலும், சுயேட்சை ஒரு தொகுதியிலும் முன்னிலை பெற்றுள்ளது.

<<<<<>>>>>

தமிழகத்தைப் பொறுத்தவரை திமுக தலைமையிலான கூட்டணி அனைத்து தொகுதிகளிலும் முன்னிலை வகிக்கிறது.

இதில் திமுக 22 தொகுதிகளிலும், காங்கிரஸ் 9 தொகுதிகளிலும், விடுதலை சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட் தலா 2 தொகுதிகளிலும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி ஒரு தொகுதியிலும் முன்னிலை வகிக்கிறது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தொகுதியில் வெற்றிபெற்று, ஒரு தொகுதியில் முன்னிலை வகிக்கிறது.

அரக்கோணம் மக்களவைத் தொகுதியில் திமுக வேட்பாளர் திரு ஜெகத்ரட்சகன், அஇஅதிமுக வேட்பாளர் திரு விஜயனைவிட 2 லட்சத்து மூவாயிரத்து 476 வாக்குகள் கூடுதலாகப் பெற்று முன்னிலை பெற்றுள்ளார்.,

ஆரணியில் திமுக வேட்பாளர் திரு தரணி வேந்தன் 1 லட்சத்து 39 ஆயிரத்து 27 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார்.

மத்திய சென்னையில் திமுக வேட்பாளர் திரு தயாநிதிமாறன், ஒரு லட்சத்து 84 ஆயிரத்து 42 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்.

வடசென்னையில் திமுக வேட்பாளர் திரு கலாநிதி வீராசாமி. இரண்டு லட்சத்து 52 ஆயிரத்து 47 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்.

தென்சென்னையில் திமுக வேட்பாளர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன் 76 ஆயிரத்து 854 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார்.

சிதம்பரத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் திரு தொல் திருமாவளவன் அஇஅதிமுக வேட்பாளரைவிட ஒரு லட்சத்து 10 ஆயிரத்து 714 வாக்குகள் கூடுதலாகப் பெற்று முன்னிலை வகிக்கிறார்.

கோவையில் திமுக வேட்பாளர் திரு கணபதி ராஜ்குமார் 66 ஆயிரத்து 807 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார்.

கடலூரில் காங்கிரஸ் வேட்பாளர் திரு விஷ்ணு பிரசாத் 1 லட்சத்து 82 ஆயிரத்து 694 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளார்.

தருமபுரி மக்களவைத் தொகுதியில் திமுக வேட்பாளர் திரு. மணி, 21 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

திண்டுக்கல் தொகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் திரு. சச்சிதானந்தன் 4 லட்சத்து 30 ஆயிரத்து 74 வாக்குகள் கூடுதலாக பெற்று முன்னிலை வகிக்கிறார்.

ஈரோட்டில் திமுக வேட்பாளர் திரு பிரகாஷ் ஒரு லட்சத்து 40 ஆயிரத்து 815 வாக்குகள் வித்தியாசதில் முன்னிலையில் உள்ளார்.

கள்ளக்குறிச்சியில் திமுக வேட்பாளர் திரு மலையரசன் 49 ஆயிரத்து 856 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளார்.

காஞ்சிபுரத்தில் திமுக வேட்பாளர் திரு செல்வம் 1 லட்சத்து 96 ஆயிரத்து 137 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்.

கன்னியாகுமரி தொகுதியில் காங்கிரிஸ் வேட்பாளர் திரு விஜய் வசந்த் ஒரு லட்சத்து 49 ஆயிரத்து 503 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளார்.

கரூரில் காங்கிரஸ் வேட்பாளர் செல்வி ஜோதிமணி ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 538 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார்.

கிருஷ்ணகிரியில் காங்கிரஸ் வேட்பாளர் திரு கோபிநாத் ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 123 வாக்குகள் வித்தியாசத்தில்முன்னிலை பெற்றுள்ளார்.

மதுரையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் திரு. வெங்கடேசன் 2 லட்சத்து 8 ஆயிரத்து 795 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

மயிலாடுதுறையில் காங்கிரஸ் வேட்பாளர் செல்வி சுதா இரண்டு லட்சத்து 70 ஆயிரத்து 451 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்,

நாகப்பட்டினத்தில் இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர் திரு செல்வராஜ், ஒரு லட்சத்து 93 ஆயிரத்து 237 வாக்குகள் கூடுதலாகப் பெற்று முன்னிலையில் உள்ளார்.

நாமக்கல்லில் திமுக கூட்டணி வேட்பாளர் திரு. மாதேஸ்வரன் 26 ஆயிரத்து 850 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்.

நீலகிரி தொகுதியில் திரு. ஆ. ராசா இரண்டு லட்சத்து 37 ஆயிரத்து 449 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்.

பெரம்பலூரில் திமுக வேட்பாளர் திரு. அருண் நேரு, மூன்று லட்சத்து 77 ஆயிரத்து 363 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார்.

பொள்ளாச்சியில் திமுக வேட்பாளர் திரு ஈஸ்வரசாமி இரண்டு லட்சத்து 21 ஆயிரத்து 382 வாக்குகள்வித்தியாசத்திலும், ராமநாதபுரத்தில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் வேட்பாளர் திரு நவாஸ் கனி ஒரு லட்சத்து 39 ஆயிரத்து 298 வாக்குகள் வித்தியாசத்திலும், சேலத்தில் திமுக வேட்பாளர் திரு செல்வகணபதி 67 ஆயிரத்து 286 வாக்குகள் வித்தியாசத்திலும் சிவகங்கையில் காங்கிரஸ் வேட்பாளர் திரு கார்த்தி சிதம்பரம் ஒரு லட்சத்து 56 ஆயிரத்து 299 வாக்குகள் வித்தியாசத்திலும் முன்னிலை பெற்றுள்ளனர்.

ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் திமுக வேட்பாளர் திரு டி ஆர் பாலு மூன்று லட்சத்து 72 ஆயிரத்து 302 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்.

தென்காசியில் திமுகவேட்பாளர் டாக்டர் ராணி 1 லட்சத்து 84 ஆயிரத்து 31 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார்.

தஞ்சாவூரில் திமுக வேட்பாளர் திரு முரசொலி மூன்று லட்சத்து 16 ஆயிரத்து 650 வாக்குகள் வித்தியாசத்திலும், தேனியில் திமுக வேட்பாளர் திரு தங்கத் தமிழ்செல்வன் இரண்டு லட்சத்து 11 ஆயிரத்து 241 வாக்குகள் வித்தியாசத்திலும், முன்னிலை வகிக்கின்றனர்.

திருச்சியில் மதிமுக வேட்பாளர் திரு துரை வைகோ இரண்டு லட்சத்து 82 ஆயிரத்து 257 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார்.

திருநெல்வேலியில் காங்கிரஸ் வேட்பாளர் திரு ராபர்ட் ப்ரூஸ் ஒரு லட்சத்து 56 ஆயிரத்து 503 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்.

திருப்பூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் திரு சுப்புராயன் ஒரு லட்சத்து 16 ஆயிரத்து 364 வாக்குகள் முன்னிலை வகிக்கிறார்.,

திருவள்ளூரில் காங்கிரஸ் வேட்பாளர் திரு சசிகாந்த் செந்தில் நான்கு லட்சத்து 35 ஆயிரத்து 116 வாக்குகள் வித்தியாசத்திலும்,

திருவண்ணாமலையில் திமுக வேட்பாளர் திரு அண்ணாதுரை ஒரு லட்சத்து 89 ஆயிரத்து 813 வாக்குகள் வித்தியாசத்திலும்,

வேலூரில் திமுக வேட்பாளர் திரு கதிர் ஆனந்த் ஒரு லட்சத்து 81 ஆயிரத்து 687 வாக்குகள் வித்தியாசத்திலும்

விழுப்புரத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் திரு ரவிக்குமார் 69 ஆயிரத்து 812 வாக்குகள் வித்தியாசத்திலும் முன்னிலை வகிக்கின்றனர்.

விருதுநகர் தொகுதியில் தேமுதிக-வும், காங்கிரஸும் மாறிமாறி முன்னிலை வகிப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*<u>(வாய்ஸ் பைட் - கமலக்கண்ணன் - 52 செகண்ட்ஸ்)</u>*

தூத்துக்குடி மக்களவைத் தொகுதியில் திமுக வேட்பாளர் திருமதி கனிமொழி 3 லட்சத்திற்கும் கூடுதலான வாக்குகளுடன் முன்னிலையில் உள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

விளவங்கோடு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் திருமதி. தாரகை கத்பட் வெற்றிபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

ஆந்திர சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் தெலுங்கு தேசம் பெரும்பாலான இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது. ஆளும் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது.

175 உறுப்பினர்களைக் கொண்ட இம்மாநில சட்டப்பேரவை தேர்தலில் 32 தொகுதியில் வெற்றிபெற்றுள்ள தெலங்கு தேசம், 104 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளது.

ஜனசேனா கட்சி 5 தொகுதிகளில் வெற்றிபெற்று, 16 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

பிஜேபி 3 தொகுதிகளில் வெற்றிபெற்று, 5 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் ஒரு தொகுதியில் வெற்றிபெற்று, 9 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

இதற்கிடையே, ஆந்திர சட்டப்பேரவை தேர்தலில் அமோக வெற்றி பெற்றுள்ள தெலுங்கு தேசம் கட்சியின் தலைவர் திரு. சந்திரபாபு நாயுடுவுக்கு தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஒடிசா சட்டப்பேரவை தேர்தலில் பெரும்பாலான இடங்களில் பிஜேபி முன்னிலை பெற்றுள்ளது. 8 இடங்களில் வெற்றிபெற்றுள்ள அக்கட்சி, 73 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

ஆளும் பிஜு ஜனதா தள் ஒரு தொகுதியில் வெற்றிபெற்று 47 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளது.

காங்கிரஸ் ஒரு தொகுதியில் வெற்றிபெற்று 13 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தொகுதியிலும், சுயேட்சை மூன்று தொகுதிகளிலும் முன்னிலை வகிக்கின்றன.

<<<<<>>>>>

மக்களவைத் தேர்தலோடு இடைத்தேர்தல் நடைபெற்ற 25 தொகுதிகளில் பிஜேபி 8 தொகுதிகளிலும் காங்கிரஸ் 4 தொகுதிகளிலும் வெற்றிபெற்றுள்ளன.

<<<<<>>>>>

மக்களவைத் தேர்தலில், மக்கள் அளித்த தீர்ப்பினை ஏற்றுக் கொள்வதாக காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த தேர்தலில் எந்தக் கட்சிக்கும் அறுதி பெரும்பான்மை கிடைக்காததை சுட்டிக்காட்டினார்.

தங்கள் கூட்டணிக்கு வாக்களித்தவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் சந்திப்பின்போது பேசிய காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல்காந்தி, கூட்டணி கட்சி தலைவர்களுடன் ஆலோசனை நடத்திய பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்வது குறித்து முடிவு செய்யப்படும் என்றார்.

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்திற்கு நாளை அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதையும் திரு. ராகுல் காந்தி சுட்டிக்காட்டினார்.

<<<<<>>>>>

மக்களவைத் தேர்தல் முடிவுகள் வெளியாகிவரும் நிலையில், இந்திய பங்குச்சந்தைகள் கடந்த நான்காண்டுகளில் இல்லாத அளவுக்கு பெரும் சரிவை சந்தித்துள்ளது.

மும்பை பங்குச்சந்தை இன்றைய வர்த்தக முடிவில் 4 ஆயிரத்து 389 புள்ளிகள் குறைந்தது.

தேசிய பங்குச்சந்தை நிஃப்டி ஆயிரத்து 379 புள்ளிகள் குறைந்துள்ளது.

சென்செக்ஸ் 5 புள்ளி ஏழு நான்கு சதவீதமும், நிஃப்டி ஐந்து புள்ளி ஒன்பது மூன்று சதவீதமும் குறைந்துள்ளது.

பொதுத்தேர்தல் முடிவுகள் முதலீட்டாளர்களின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக அமைந்ததால், இன்றைய பங்குச்சந்தை பெரிய அளவில் வீழ்ச்சியை சந்தித்துள்ளதாக பங்குச்சந்தை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

<<<<<>>>>>

விளையாட்டுச் செய்திகள்

இந்தோனேஷியா ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் திரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-15, 21-11 என்ற செட் கணக்கில், தைவானின் **Yu Pei Cheng – Yu Hsing Sun** இணையை வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் பிரியான்ஷு ரஜாவத், லக்ஷயா சென் மற்றும், கலப்பு இரட்டையர் பிரிவில் சுமித் ரெட்டி – சிக்கி ரெட்டி இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளன

---------

உலகக்கோப்பை டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில், இங்கிலாந்து - ஸ்காட்லாந்தை எதிர்கொள்கிறது.

**Bridgetown**-ல் இப்போட்டி இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

**Dallas**-ல் இரவு ஒன்பது மணிக்கு தொடங்கும் மற்றொரு ஆட்டத்தில் நெதர்லாந்து – நேபாளம் அணியை எதிர்கொள்கிறது.

--------------------

நார்வே செஸ் போட்டியின் 7-ஆவது சுற்று முடிவில் இந்தியாவின் பிரக்யானந்தா 3-வது இடத்தில் உள்ளார்.

மகளிர் பிரிவில் வைஷாலி 5-ஆவது இடத்தில் உள்ளார்.

**<<<<<END>>>>>**